**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,**

**METTUPALAYAM**

**DEPOSITION OF WITNESS**

**O.S.4/2022**

**CNR.No.TNCB19000**

Date: 08.07.2025 DW.1

| பெயர் | ராமசாமி | வயது | 75 |
|---|---|---|---|
| த/பெ | காளப்ப கவுடர் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | சிக்காரம்பாளையம் | மாவட்டம் | கோயமுத்தூர் |
| | | தொழில் | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 8th July 2025

பி.வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என் தாத்தா திருமப்ப கவுடர் 1954 ம் ஆண்டு சிக்காரம்பாளையத்தில் இறந்தார். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. எனது தாத்தா திருமப்ப கவுடர் இறக்கும் போது சிக்காரம்பாளையத்தில் எந்த கதவு எண்ணில் இருந்தார் என்றால் கதவு எண்.10/4. என் தாத்தா திருமப்ப கவுடர் இறக்கும்போது எந்த கதவு எண்ணில் இருந்தாரோ அதே கதவு எண்தான் தற்போதும் இருந்து வருகிறது என்றால் சரிதான். எனது தாத்தாவின் இறப்பு சான்றிதழ் தொலைந்து விட்டதாக முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். முதன்முதலில் எந்த வருடத்தில் எனது தாத்தாவின் இறப்பு சான்றிதழை வாங்கினேன் என்றால் வருடம் ஞாபகம் இல்லை.

நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ள எனது தாத்தாவின் இறப்பு சான்றிதழை எப்போது வாங்கினேன் என்றால் 3-1/2 மாதம் ஆகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா. ஆ 54 ஆவணம்தான் எனது தாத்தா இறந்ததற்கான இறப்பு சான்றிதழ் என்றும் அதற்கு முன்பு பெற்றதில்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே ஜெராக்ஸ் ஆவணம் இருந்தது அதை வைத்துதான் பி.வா.சா. ஆ 54 வாங்கினேன். அந்த ஜெராக்ஸ் ஆவணம் எந்த வருடத்தில் வாங்கியது என்றால் தேதி பற்றி எனக்கு தெரியாது. அந்த ஜெராக்ஸ் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தற்போது அது என்னிடம் இல்லை. தொலைந்து போனதாக சொன்ன எனது தாத்தாவின் இறப்பு சான்றிதழின் நகல் என்னிடம்

இருந்தது என்றால் தற்போது அது என்னிடம் இல்லை.

இந்த தாவா வழக்கை வாதி தாக்கல் செய்த பின்பு நான் எதிர் வழக்குரை தாக்கல் செய்த பின்புதான் இறப்பு சான்றிதழுக்காக விண்ணப்பம் செய்தேன் என்றால் கேட்டதாக சொல்லி வாங்கினேன். 2022 ம் ஆண்டு இறப்பு சான்றிதழ் வாங்கியதற்கான நடைமுறை எனக்கு தெரியாது என்றால் சரிதான். இறப்பு சான்றிதழை முறையாக நான் வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் 1956 க்கு முன்பு கர்த்தா இறந்து விட்டால் ஆண் மகனுக்குதான் சொத்து பாத்தியப்படும் என்பதால் தற்போது அந்த இறப்பு சான்றிதழை வாங்கி இந்த வழக்கில் போலியாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

அதனால்தான் ஏற்கனவே நாகராஜ் தாக்கல் செய்த வழக்கில் பெண் பிள்ளைகள் வாரிசாக இருப்பதாக சொல்லவில்லை என்றும் இந்த வழக்கில் வாதியானவர் பெண்களுக்கு பங்கு இருப்பதாக சொன்ன பின்பு திருமப்ப கவுடர் 1954 ம் ஆண்டு இறந்ததாக பொய்யான ஆவணத்தை தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே திருமப்ப கவுடர் 1956 க்கு பிறகுதான் இறந்தார் என்றால் சரியல்ல. இந்த சான்றிதழை வழங்கியவரை சாட்சியாக விசாரணை செய்ய ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் திருமப்ப கவுடர் இறக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த இறப்பு சான்றிதழ் இந்த வழக்கிற்கு ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார். |

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2025.07.08 19:03:09 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.